திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி மண்டலம் 3ல் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மக்கள் பயன்பாட்டிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தொடங்கி வைத்து பார்வையிட்டு பயனாளிகள் வழங்கிய மனுக்களை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளிடம் அறிவுறுத்தினர் உடன் மாநகர மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா, மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் பகுதி கழக செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பொன் விஜயன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 160வது வட்டத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் பிருந்தா ஸ்ரீ மற்றும் அரசு அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

அமலாக்கத்துறை ஒன்றிய அரசின் ஆயுதமா?

நீதிமன்ற உத்தரவுகளை மீறும் அமலாக்கத்துறை!

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை

சென்னை, ஜூலை.25-

அமலாக்கத்துறை ஒன்றிய அரசின் ஆயுதமல்ல; அரசியலைத் தேர்தல் களத்தில் மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும்; உச்சநீதிமன்ற உத்தரவுகளையும் மீறி அமலாக்கத்துறை நடந்து கொள்ளலாமா? இதற்கு முற்றுப் புள்ளி எப்போது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஜனநாயகத்தின் படி மக்கள் ஆதரவு பா.ஜ.க.வுக்குப் போதிய அளவுக்குக் கிடைக்காத காரணத்தால், தேர்தலில் தோற்றாலும் ஜெயித்தாலும் தாங்களே எல்லாம் என்று சொல்லக் கூடிய அளவிற்கு, எதிர்க் கட்சியினரை அழிக்கவும் - ஒழிக்கவும், கட்சிகளை உடைப்பதற்கும் ஆர்எஸ்எஸ் திட்டப்படி எல்லாம்

பி.ஜே.பி. மயம், எல்லாம் ஆர்.எஸ்.எஸ். மயம், எல்லாம் ஹிந்துராஷ்டிரா என்று ஆக்குவதற்கும் மக்கள் ஆதரவு பெற்று வெற்றி பெற்ற கட்சிக்காரர்களை எல்லாம் திரிசூலங்களை வைத்து தங்கள் வசப்படுத்துவதும், மிரட்டுவதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிற காட்சி.

பலமுறை இதனை நாம் வெளிப்படுத்தி இருக்கிறோம். இப்போதும் அதே தான் பயன்படுத்தப்படுகிறது. அந்த மூன்று திரிசூலங்களில் ஒன்று சி.பி.அய்., மற்றொன்று வருமானவரித் துறை, மூன்றாவது அமலாக்கத்துறை. (அமலாக்கத் துறை என்பதும் நிதித் துறையின் கீழேதான்).

இவற்றை பயன்படுத்தி, எதிர்க்கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களையெல்லாம் தங்கள் வயப்படுத்த வேண்டும் என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிற சூழ்நிலையில், அமலாக்கத் துறையால் தொடுக்கப்படும் வழக்குகள் எப்படி அரசியல் நோக்கத்தோடு போடப்பட்டன என்பதை, உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் தொடர்ந்து சொல்லி வருகின்றன.

கருநாடகா - சித்தராமையாமீது தொடரப்பட்ட வழக்கிலேயே அமலாக்கத் துறைக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்

"அரசியல் களத்தைத் தேர்தலில் வைத்துக் கொள்ள வேண்டும் - நீதிமன்றங்களில் அல்ல" என்று கருநாடகக் காங்கிரஸ் ஆட்சியின் முதலமைச்சர் சித்தராமையா மீது தொடுக்கப்பட்ட வழக்கு ஒன்றின் மேல் முறையீட்டு விசாரணையின்போது, ஒன்றிய அரசின் அமலாக்கத் துறைக்குக் கடும் கண்டனத்தை இரு தினங்களுக்கு முன்னால் தெரிவித்துள்ளது உச்சநீதிமன்றம். நிலப் பரிவர்த்தனை தொடர்பான புகாரில் லோக் ஆயுக்தா காவல்துறையினரால் வழக்கு தொடுக்கப்பட்டு, கருநாடகாவில் வழக்கு நடைபெற்று வரும் நிலையில், அமலாக்கத் துறையும் அதே பிரச்சினைக்கு வழக்கு தொடுத்து சித்தராமையாவின் இணையர் உள்பட 5 பேரை விசாரணைக்கு அழைத்து அனுப்பிய அழைப்பாணையை ரத்து செய்து, கருநாடக உயர்நீதிமன்ற நீதிபதி ஆணையிட்டார். அதை எதிர்த்து, அமலாக்கத் துறை தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் பி.ஆர்.கவாய், ஜஸ்டிஸ் கே.வினோத் சந்திரன் ஆகியோரின் அமர்வு இத்தகைய அரசியல் பிரச்சினைகளில் ஆர்வமாக அமலாக்கத் துறை தலையிடுவதேன் என்று கேள்வி எழுப்பி, அமலாக்கத் துறையின் மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து, கருநாடக உயர்நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்துள்ளது.

மேலும், "கெடுவாய்ப்பாக, மகாராட்டிரத்தில் எனக்குச் சில அனுபவங்கள் இருக்கின்றன. தயவுசெய்து எங்களை ஏதாவது பேசும் நிலைக்குத் தள்ளிவிடாதீர்கள். இல்லையெனில், அமலாக்கத் துறை பற்றி கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு நாங்கள் வர நேரிடும். அரசியல் சண்டைகள் மக்களின் வாக்கெடுப்பில் தீர வேண்டியவை. அதற்கு அமலாக்கத் துறை ஏன் பயன்படுத்தப்பட வேண்டும்?" என்று கடுமையாக எச்சரித்திருக்கிறார் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி.

உச்சநீதிமன்றத்தின் கண்டனம் அமலாக்கத் துறைக்குத் தொடர்ந்து கொண்டே உள்ளது

அமலாக்கத் துறையின் செயல்பாடுகளுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவிப்பது இது முதன் முறையன்று. கடந்த சில மாதங்களிலேயே பல முறை உச்சநீதிமன்றம், அமலாக்கத் துறையின் செயல்பாடுகள், போக்குகள் மீது அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளது.

1. டாஸ்மாக் கடைகள் ஒதுக்கீட்டில் 2014 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் முறைகேடு நடந்ததாகத் தமிழ்நாட்டில் 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடைபெற்றுவருகின்றன. இதில் திடீரென நுழைந்த அமலாக்கத் துறை, கடந்த மார்ச், மே மாதங்களில் முறையே டாஸ்மாக் தலைமை அலுவலகம் உள்ளிட்ட இடங்களிலும், அதன் மேலாண் இயக்குநர் இல்லம் உள்ளிட்ட இடங்களிலும் தேடுதல் வேட்டையை நடத்தியது. இது தொடர்பான வழக்கில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் பி.ஆர்.கவாய், ஜஸ்டிஸ் ஏ.ஜி.மாஷி ஆகியோர் அமர்வு, அமலாக்கத் துறை எல்லையைத் தாண்டிச் செயல்படுவதாகக் கண்டித்தது. அத்துடன், அமலாக்கத் துறையின் நடவடிக்கைகள், இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்துக்கு மாறாகச் செயல்படுவதாகவும் எச்சரித்தது. (பண மோசடித் தடுப்புச் சட்டத்தின் (PMLA, 2002) கீழ் அமலாக்கத்துறை இதில் வழக்குப் பதிவு செய்திருந்தது.)

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை மீறுவதா?

1 (அ) இதே வழக்கின் தொடர்ச்சியாக இன்று (24.07.2025) ஏடுகளில் வெளிவந்துள்ள மற்றொரு செய்தி. டாஸ்மாக் வழக்கு தொடர்பாக திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவர், தொழிலதிபர் ஒருவர்ஆகிய இருவர் வீடு மற்றும் அலுவலகங்களில் சோதனை செய்தது அமலாக்கத் துறை. அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், மேல் நடவடிக்கைகள் எடுக்க இடைக்காலத் தடை விதித்து, அமலாக்கத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதையும் மீறி, மீண்டும் அவர்களுக்கு தாக்கீது அனுப்பியுள்ளது அமலாக்கத் துறை தீர்ப்பாயம். இதற்கு நேற்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜஸ்டிஸ் எம்.எஸ்.ரமேஷ், ஜஸ்டிஸ் வி.லட்சுமி நாராயணன் ஆகியோர், உயர்நீதிமன்றத்தின் உத்தரவை மீறியுள்ள அமலாக்கத் துறைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

2. பண மோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ், சட்டீஸ்கர் மாநில அதிகாரி அருண் திரிபாதி உள்ளிட்டோருக்கு எதிராக அமலாக்கத் துறையால் தொடுக்கப்பட்ட வழக்கு ஒன்றில், சட்டீஸ்கர் உயர்நீதிமன்றம் வழங்கிய ஆணையை மீறி, அவரைக் காவலில் வைத்திருந்ததைக் கண்டித்து, பணமோசடித் தடுப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்று அமலாக்கத் துறையை உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜஸ்டிஸ் அபய் எஸ். ஓகா, ஜஸ்டிஸ் உஜ்ஜல் பூயான் ஆகியோர் அமர்வு கண்டித்திருந்தது. (பிப்ரவரி 12, 2025) அந்த வழக்கு 2019-2023 வரை சட்டீஸ்கரில் ஆட்சியிலிருந்த பூபேஷ் பாகல் தலைமையிலான காங்கிரஸ் அரசின் காலத்தில் ஊழல் நடந்ததாக, அதிகாரிகளை மய்யப்படுத்தி, அரசியல்வாதிகளை நோக்கி நகரும் வகையில் அமலாக்கத் துறையால் தொடுக்கப்பட்ட வழக்காகும். அதே வழக்கில் அரவிந்த் சிங் என்பவருக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை வைத்ததற்கும் உச்சநீதிமன்றம் அமலாக்கத் துறையைக் கண்டித்துள்ளது.

நிதி அமைச்சர் பொறுப்பேற்க வேண்டாமா?

உச்சநீதிமன்றத்தின் இத்தகைய கடும் கண்டனங்களுக் உள்ளாகியுள்ள அமலாக்கத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள ஒன்றிய நிதி அமைச்சர், இந்த அதிகார அத்துமீறல்களுக்கும், வரம்பு மீறல்களுக்கும், அரசியல் நோக்கிலான வழக்குகளுக்கும் பொறுப்பேற்க வேண்டாமா?

அரசியல் காரணங்களுக்காக ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புகள் பயன்படுத்தப்படுவதை, நீதிமன்றங்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றனவே! கூண்டில் அடைக்கப்பட்ட கிளியைப் போல இருப்பதாக, டில்லி மேனாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் பிணை வழக்கில் சி.பி.அய். (CBI) யை விமர்சித்ததே உச்சநீதிமன்றம். உள்ளூரில் பா.ஜ.க. பிரமுகருடன் இருந்த பிரச்சினை காரணமாக, பண மோசடியில் ஈடுபட்டதாக தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு ஒடுக்கப்பட்ட சமுதாய விவசாயிகளுக்கு சம்மன் அனுப்பப்பட்டதாக குற்றச்சாட்டுக்கு இலக்கானதும் இதே அமலாக்கத் துறை தானே!

எப்பொழுது முற்றுப்புள்ளி?

அரசியலமைப்புச் சட்டத்தையும், ஒட்டுமொத்த நாட்டையும் காப்பதற்காக உருவாக்கப்பட்ட சிபி.அய், அமலாக்கத் துறை, வருமான வரித் துறை போன்ற அமைப்புகளை ஒன்றிய அரசு தன்னுடைய அரசியல் லாபங்களுக்காகவும், கட்சிகளை மிரட்டவும், தங்களின் கொள்கை எதிரிகளை இன்னலுக்கு உள்ளாக்கவும் பயன்படுத்துவதற்கு எப்போது முற்றுப் புள்ளி வைப்பது?

ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டாமா? மக்கள் தங்கள் வாக்குரிமையின் மூலமாகத் தங்கள் விருப்பத்தைப் பிரதிபலித்து தேர்ந்தெடுத்த ஆட்சிகளைக் காப்பாற்ற வேண்டுமா? அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்தி, எல்லோரையும் மிரட்டி, அழித்து குறுக்கு வழியில் வரக்கூடிய பாசிசத்திற்கு தலைவணங்க வேண்டுமா? என்பதை மக்கள் தீவிரமாக யோசிக்க வேண்டும்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றம்!"

இவ்வாறு திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"வளைகுடா நாடுகளில் பணியாற்றி வரும்

இந்தியத் தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?"

மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25-

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா நாடாளுமன்றத்தில், "வெளிநாட்டில், குறிப்பாக வளைகுடா நாடுகளில் கட்டுமான மற்றும் இதர வீட்டுப் பணிகளில் ஈடுபடும் இந்தியத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள், கூலி மோசடி, பாதுகாப்பற்ற சூழல் போன்ற பிரச்சனைகளில் இருந்து அவர்களைக் காத்திட ஒன்றிய அரசுஎடுத்த நடவடிக்கைகள் என்ன?" என்றும், "வளைகுடா நாடுகளில் கடந்த ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான இந்தியர்களின் மரணம் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் வந்துள்ள நிலையில், அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அவசர மீட்பு நடவடிக்கைகள் என்ன?" போன்ற கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய வெளியுறவுத்துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் அவர்கள் "இந்தியத் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு முதன்மை முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும், அவசர உதவிக்காக இந்தியத் தூதரகங்கள் பல வழிகளில் இணைப்பு ஏற்படுத்தி, மாடாட் போன்ற குற்றப்புகார் பதிவுப் போர்டல்கள், தொலைபேசி எண்கள், செயலிகள், வாட்ஸ்அப் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன" என்று கூறினார்.

மேலும் "இந்தியத் தூதரகங்கள் வழியாக வெளிநாட்டில் சிக்கிய பெண்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தங்குமிடம், சிகிச்சை, திரும்ப அழைக்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் வழங்கப்படுவதாகவும், ப்ரவாசி பாரதியா பயமா யோஜனா, பி.டி.ஓ.டி. போன்ற திட்டங்கள் பாதுகாப்பான மீட்புப் பயணத்தை உறுதி செய்கின்றன" என்றும் தெரிவித்தார்.

மேலும் "2024 மற்றும் 2025 (ஜூன் மாதம் வரை) ஆண்டுகளில் வளைகுடா நாடுகளில் முறையே 7,001 இந்தியர்கள் மற்றும் 3,723 இந்தியர்கள் பலியாகியுள்ளனர் என்பது கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் உண்மைதான் என்றும், இவ்விதமான நிலைகளுக்கு எதிராக சட்ட உதவி, இறந்தவர் உடலைப் பாதுகாப்பாக தாயகம் மீட்டு வருதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு இந்திய சமூக நல நிதி (ICWF) வழியாக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது" என்றும் பதிலளித்துள்ளார்.

தேசிய அளவில் 9.69 சதவிகித பொருளாதார வளர்ச்சியுடன் -

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு தனி நபர் வருமானம் உயர்வு!

'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 25-

தேசிய அளவில் தனி நபர் வருமானத்தில் 9.69 சதவிகித பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்தியுடன், மென்மேலும் தமிழ்நாடு இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலம் என்ற இலக்கை நோக்கி முன்னேறுவதே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் விருப்பமாகும் என 'தினகரன்' நாளேடு 24.7.2025 தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

வருமானம் என்பது ஒரு நாட்டில் தனிநபர், தனது வேலைவாய்ப்பு, சுயதொழில் மூலம் பெறும் வருமானம் உள்ளிட்டவற்றை கணக்கிட்டு கூறப்படுவதாகும். சில சமயங்களில் தனிநபர் சார்ந்த கூட்டுத்தொழில் மூலமும், குடும்ப உறவுகள் மூலம் பெறப்படும் வருமானமும் கணக்கிடப்படும். அந்த வகையில் இந்தியாவின் தனிநபர் வருமானம், கடந்த 2024-25ஆம் ஆண்டில் ரூ.1,14,710 ஆக உயர்ந்துள்ளது. 2014-2015ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தேசிய அளவில் தனிநபர் வருமானம் ரூ.72,805ஆக இருந்தது. தற்போது சுமார் 58 சதவீதம் வரை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவை பொறுத்த வரை கடந்தாண்டில் தனிநபர் வருமானம் அதிகமுள்ள மாநிலத்தில் கர்நாடகா முதலிடத்தை பிடித்துள்ளது. இம்மாநிலத்தில் தனிநபர் வருமானம் ரூ.2 லட்சத்து 6 ஆயிரத்து 605 ஆக உள்ளது. தமிழகத்தில் தனிநபர் வருமானம் ரூ.1 லட்சத்து 96 ஆயிரத்து 309 ஆக உள்ளதாக ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது 2023-24ம் ஆண்டை விட 9.69 சதவிகித பொருளாதார வளர்ச்சியாகும்.

சென்னை உட்பட பல மாவட்டங்களில் இயற்கை பேரிடர் பாதிப்பு கடுமையான சூழலிலும், தனிநபர் வருமானத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இது திராவிட மாடல் அரசின் பொருளாதார வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் முக்கிய மைல் கல்லாக பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை தி.மு.க. அரசு கடந்த மே 7, 2021-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் மாநிலத்தில் முத லீட்டாளர்கள் மாநாட்டை தொடர்ந்து நடத்தி வந்தது. முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர வேண்டுமென தொடர்ந்து கூறி வந்தார்.

2021-ல் திமுக அரசு பொறுப்பேற்றதில் இருந்து நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடு, சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு, வெளிநாட்டு முதலீடு சார்ந்த பயணங்கள் உள்ளிட்டவை மூலம் சுமார் 895 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. சுமார் ரூ.10.15 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 33 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பு பெறும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆண்களுக்கு நிகராக பெண்களும் படித்தும், உழைத்தும் முன்னேற வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களும் தனிநபர் வருமானத்தை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. அதாவது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே அரசு நகர பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் என்று அறிவித்த திட்டத்தின் மூலம், சுமார் 700 கோடி இலவச பயணங்கள் இந்த 4 ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளன.

இது கல்வி, வேலை, சுயதொழில் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் பெண்களை பொருளாதார சிரமமின்றி பங்கேற்க வைத்துள்ளது என்று கூறுவது மிகையல்ல. மேலும், 4.95 லட்சம் கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், 1.15 கோடி மகளிர்க்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை, மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் தமிழ் புதல்வன் திட்டம், வீடு தேடி மருத்துவம், வீடு தேடி கல்வி தரும் திட்டம் உள்பட மக்களின் நலன் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்தும் எண்ணற்ற திட்டங்களும், மிக முக்கிய காரணங்களாக பார்க்கப்படுகிறது.

தனிநபர் வருமானத்தை மென்மேலும் உயர்த்தி இந்தியாவிலேயே முதன்மை யானதாகவும், பொருளாதாரத்தை மேலும் உயர்த்தி, நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற லட்சிய இலக்கை நோக்கி பயணிக்க வேண்டுமென்பதே முதல்வர் மு.க. ஸ்டாலின் விருப்பமாகும். அதை தமிழ்நாடு அடையும் நாட்களும் வெகுதூரத்தில் இல்லை என்பதே நிதர்சனம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

ஜூலை 24, 2025 வியாழக்கிழமை

வெற்றிநடை

தனிநபர் வருமானம் என்பது ஒரு நாட்டில் தனி நபர், தனது வேலைவாய்ப்பு, சுயதொழில் மூலம் பெறும் வருமானம் உள்ளிட்டவற்றை கணக்கிட்டு கூறப்படுவதாகும். சில சமயங்களில் தனிநபர் சார்ந்த கூட்டுத்தொழில் மூலமும், குடும்ப உறவுகள் மூலம் பெறப்படும் வருமானமும் கணக்கிடப்படும். அந்த வகையில் இந்தியாவின் தனிநபர் வருமானம், கடந்த 2024-25ம் ஆண்டில் ரூ.1,14,710 ஆக உயர்ந்துள்ளது. 2014-2015ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தேசிய அளவில் தனிநபர் வருமானம் ரூ.72,805 ஆக இருந்தது. தற்போது சுமார் 58 சதவீதம் வரை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மயிலை இரா. காசிச்சாமி

ஜூலை 25 (1992)



தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த இவர் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் தீவிரமாய் பணியாற்றி, கழகம் துவக்க காலம் முதல் கழகப் பணியாற்றத் தொடங்கினார். 1952 முதல் சென்னை மாவட்டத்தில் கீழ்ப்பாக்கம் பகுதியிலும் பின்னர், மயிலை பகுதியில் தனது இறுதிநாள் வரை கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், ஈழத்தமிழர் பாதுகாப்பு போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1968ஆம் ஆண்டு மயிலை பகுதி, 94வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து மயிலை வார்டு குழுத் தலைவராகவும் சிறப்பாக பணியாற்றி பொதுமக்களிடம் பாராட்டைப் பெற்றவர்.

இவர் பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தமிழ்நாடு வணிகர்களின் மத்தியில் கழக உணர்வை வளர்த்து அதனடிப்படையில், தமிழ்நாடு வர்த்தக கழக பொதுச்செயலாளர் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் "மயிலையில் கழகம் வளர்த்த சிங்கம்" என பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொன். கலியமூர்த்தி

ஜூலை 25 (2011)

பூதலூர் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

தஞ்சை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

பூதலூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்புகளையும் திறம்பட வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.